உ

வல்லக்கோட்டை முருகன் துணை.

தமிழ்நாட்டுத் திருப்புகழ் சபைகளின் கூட்டமைப்பு

(மாநிலத் தலைமையகம்)

52, அருணாச்சலம் முதல் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030. தொலைபேசி : 642 6735 பி.பி.



தெய்வீகக்கவி

அருள்மிகு அருணகிரிநாதர் பாடல்கள்

02.01.2000 - 09.01.2000

போட்டிப் பாடல்கள்

உ

வல்லக்கோட்டை முருகன் துணை

தமிழ்நாட்டுத் திருப்புகழ் சபைகளின் கூட்டமைப்பு

(மாநிலத் தலைமையகம்)

52, அருணாச்சலம் முதல் தெரு, செனாய் நகர்,

சென்னை - 600 030. தொலைபேசி : 642 6735 பி.பி.

தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம்

வல்லக்கோட்டை

தெய்வீகக்கவி

அருள்மிகு அருணகிரிநாதர் பாடல்கள்

போட்டி நாள்: 09.01.2000 காலை 9.00 மணி முதல்

பிற்பகல் 3.00 மணி வரை

நிகழ்விடம்:

சீதா கிங்ஸ்டன் ஹவுஸ் மெட்ரிக் மேனிலைப் பள்ளி,

768, பூந்தமல்லி நெடுஞ்சாலை (டெய்லர்ஸ் ரோடு)

கீழ்பாக்கம், சென்னை - 600 010. போன் : 641 2169 பி.பி.

"சேர்ந்திசைப்போம் வாரீர்"

நிகழ்விடம்:

வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் ஆலயம்

"சேர்ந்திசைப்போம் வாரீர்" 26.1.99 காலை 10.00 மணி முதல்

பிற்பகல் 1.00 மணி வரை

பரிசளிப்பு விழா: நாள் **26.01.2000**

பிற்பகல் 2.00 மணி முதல் 4.00 மணி வரை

✆ 641 2101 - பி.பி. 642 6735 பி.பி.

ம. பெரியசாமிப்பிள்ளை, எம்.ஏ, எம்.எட்., பி.எஸ்சி., பி.எல்., பி.ஜி.சி.டி.இ.,

உதவித் தலைமை ஆசிரியர்,

சென்னை கிறித்தவக் கல்லூரி மேனிலைப் பள்ளி,

சேத்துப்பட்டு, சென்னை-31.




ஸ்ரீ அருணகிரி சுவாமிகள்

9/1

தமிழ்நாட்டுத் திருப்புகழ் சபைகளின் கூட்டமைப்பு

52, அருணாசலம் முதல் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030. தொலைபேசி : 642 6735 பி.பி.

மாநில நிர்வாகியர் பட்டியல்

புரவலர்கள்

1. தொழிலதிபர், வள்ளல் திருமிகு. **பெ. கோவிந்தசாமிப் பிள்ளை** அவர்கள்
சேர்மன் & நிர்வாக இயக்குநர்,
செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட், சென்னை - 600 108.
2. வல்லக்கோட்டை முருகனடிமை தவத்திரு.
அரங்கநாதன் அடிகளார், அவர்கள்,
அண்ணாநகர், சென்னை - 600 040. தொலைபேசி : 620 0194 பி.பி.

மாநிலத் தலைவர் & மாநில அமைப்பாளர்

திரு. **ம. பெரியசாமிப்பிள்ளை**, எம்.ஏ., எம்.எட்., பி.எஸ்சி., பி.எல்., பி.ஜி.சி.டி.இ. அவர்கள்
உதவித் தலைமை ஆசிரியர்
சென்னை கிறித்தவக் கல்லூரி மேனிலைப் பள்ளி, சேத்துப்பட்டு,
சென்னை - 600 031. தொலைபேசி வீடு : 642 6735

மாநிலத் துணைத் தலைவர்கள்

1. திருப்புகழ் மாமணி திரு. விசாகநம்பி அவர்கள், மேற்குமாம்பலம்
2. திருப்புகழ் வித்தகர் திரு. சி.வா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், அயன்புரம்.
3. திருப்புகழ் வளர்மணி திரு. எம். கோடிலிங்கம் அவர்கள், திருவான்மியூர்.
4. திருப்புகழ் கவிமணி திரு. மு. அருணகிரி அவர்கள், குயப்பேட்டை
5. திருப்புகழ்ச் செல்வம் திரு. எம்.பி. ஜெயராமன் அவர்கள், மேற்கு மாம்பலம்

6. திருப்புகழ் முக்கனி வளையப்பட்டி திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள், திருவல்லிக்கேணி
7. திருப்புகழ் ஒளிர்மணி திரு. கவிஞர் முருகசரணம் அவர்கள், சென்னை-63.
8. திருப்புகழ் அருள்மணி திரு. பி.எஸ். கிருஷ்ண அய்யர் அவர்கள், அண்ணாநகர்.
9. திருப்புகழ் பண்பொலி திருமதி. சேலம் ஜெயலட்சுமி அவர்கள், மாம்பலம்.
10. திருப்புகழ் மலர்மணி திரு. ஏ.ஆர். சுப்பிரமணியம் அவர்கள், அண்ணாநகர்.
11. திருப்புகழ் வடிவம் திரு. கே. ராஜன் அவர்கள், செயிண்ட் தாமஸ் மவுண்ட்.
12. திருப்புகழ் வளர்மணி திரு. பி.எஸ். கணேசன் அவர்கள், வண்ணாரப்பேட்டை.
13. திருப்புகழ் கனிமொழி திரு. கவிஞர் மு. குழந்தைவேலன் அவர்கள், அண்ணாநகர்.
14. திருப்புகழ்த் தென்றல் திரு. நடராஜன் அவர்கள், அயன்புரம்.
15. திருப்புகழ்ச் சுழல்மணி திரு. சி. ஏழுமலை அவர்கள், ஆவடி.

மாநிலப் பொதுச் செயலர்

திருப்புகழ்த் தவழ்மணி திரு.ஆர்.ராஜாமணி அவர்கள்,
2. ஆனந்தம் நகர், திருவேற்காடு, சென்னை - 600 077.
(ஜெய் கோபால் கரோடியா பவுண்டேஷன்)

மாநிலச் செயலர்கள்

1. இசை ஆசிரியர் திருப்புகழ் கவிஞானி திரு. எம். பாலதேசிகர் அவர்கள், அரும்பாக்கம்.
2. திருப்புகழ்த் தென்றல் திரு. ஓ.எம். ரகுபதி அவர்கள், சிந்தாதிரிப்பேட்டை.
3. திருப்புகழ்த் தென்றல் திரு. என். முனுசாமி அவர்கள், அரும்பாக்கம்.

4. திருப்புகழ்த் தொண்டன் திரு. ஆர்.பி. ராமலிங்கம் அவர்கள். எழும்பூர்.
5. திருப்புகழ்க் குயில் திருமதி. பாலசரோஜா அவர்கள், அரும்பாக்கம்.

மாநில இணைச் செயலர்கள்

1. திருப்புகழ் ஒளிர்மணி திரு. வி. தணிகாச்சலம் அவர்கள். வில்லிவாக்கம்.
2. திருப்புகழ் மலர்மணி திரு. ஏ. சிதம்பரம் அவர்கள், மடிப்பாக்கம்
3. திருப்புகழ் வளர்மணி திரு. எஸ். சங்கரன் அவர்கள்,குயப்பேட்டை.
4. திருப்புகழ் வாணர் திரு. லோகநாதன் பிள்ளை அவர்கள், குயப்பேட்டை.
5. திருப்புகழ் மாமணி திரு. வி.டி. திருநாவுக்கரசு அவர்கள், ஆலந்தூர்.
6. திருப்புகழ் இசைச் சித்தர் திரு. சிதம்பரம் மீனாட்சிசுந்தரம் அவர்கள், சென்னை-50.
7. திருப்புகழ்க் கவிமணி திரு. பி.ஜே. மாதவன் அவர்கள், சுங்கச்சாவடி.
8. திருப்புகழ்ப் புயல் டாக்டர் கே.ஜி.பி. ஈஸ்வர் அவர்கள், அயன்புரம்
9. திருப்புகழ் மாமணி திரு. கமலக்கண்ணன் அவர்கள், வளசரவாக்கம்.
10. திருப்புகழ்த் தென்றல் திரு. மதிவண்ணன் அவர்கள், சென்னை-63.
11. திருப்புகழ்த் தவழ்மணி செல்வி டாக்டர் கே.ஆர். கல்பகம் அவர்கள், மயிலை.
12. திருப்புகழ் இசைமணி செல்வி பா. வள்ளி அவர்கள், சைதை.

மாநிலப் பொருளர்

திருப்புகழ் வளர்மணி திரு. **சி. மணிக்கண்ணன்** அவர்கள்.
417. பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106
தொலைபேசி : 641 2101

தொலைபேசி : 641 2101 P.P.

வல்லக்கோட்டை

முருகனடியார் திருப்புகழ்சபை

417, பூந்தமல்லி நெடுஞ்சாலை, அரும்பாக்கம், சென்னை - 600 106.

ஆசிரியர் : இசைமணி M. பாலதேசிகர்
தலைவர் : திரு. C. மணிகண்ணன்
திரு. R. இராஜாமணி (திருவேற்காடு)
திருமதி. பாலசரோஜா அம்மையார்

நமப் பார்வதி பதயே
ஹர ஹர மகாதேவா
தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
ஜே சித்திவிநாயக மூர்த்திக்கு ஜே
அன்னை பராசக்திக்கு ஜே
வெற்றிவேல் முருகனுக்கு
ஹர ஹரோகரா
வல்லக்கோட்டை முருகனுக்கு
ஹர ஹரோகரா

விநாயகர் துதி அனைவருக்கும் பொது.

சிம்மேந்திரமத்யமம் ஆதி

உம்பர் தருத் தேநுமணிக் கசிவாகி
ஒண்கடலிற் றேனமுதத் துணர்வூறி;
இன்பரசத் தேபருகிப் பலகாலும்
என்றன் உயிர்க் காதரவுற் றருள்வாயே;

தம்பிதனக் காக வனத் தணைவோனே
தந்தைவலத் தால் அருள்கைக் கனியோனே;
அன்பர் தமக் கான நிலைப் பொருளோனே
ஐந்துகரத் தானை முகப் பெருமாளே

தொகுப்பு 1
(ஒன்று முதல் 4 வகுப்பு வரை)

மலயமாருதம் — ஆதி

1. சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலந் துஞ்சித் திரியாதே;
கந்தனென் றென்றுற் றுனைநாளும்
கண்டுகொண் டன்புற் றிடுவேனோ;
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா;
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே

இந்தோளம் — ஆதி

2. வரதா மணிநீ என ஓரில்
வருகா தெதுதான் அதில் வாரா(து)
இரதா திகளால் நவலோகம்
இடவேகரியாம் இதிலேது;
சரதா மறையோ தயன்மாலும்
சகலா கமநூல் அறியாத
பரதே வதையாள் தருசேயே
பழனா புரிவாழ் பெருமாளே

சாருகேசி ஆதி

3. காமியத் தழுந்தி யிளையாதே
காலர் கைப் படிந்து மடியாதே;
ஓமெழுத்தி லன்பு மிகவூறி
ஓவியத்தி லந்த மருள்வாயே;
தூமமெய்க் கணிந்த சுகலீலா
சூரனைக் கடிந்த கதிர்வேலா;
ஏமவெற் புயர்ந்த மயில்வீரா
ஏரகத் தமர்ந்த பெருமாளே.

உசேனி கண்திருபுடை

4. இயல் இசையில் உசித வஞ்சிக் கயர்வாகி
இரவுபகல் மனது சிந்தித் துழலாதே;
உயர்கருணை புரியும் இன்பக் கடல்மூழ்கி-
உனைஎனதுள் அறியும் அன்பைத் தருவாயே;
மயில் தகர்கல் இடையர் அந்தத் தினைகாவல்-
வனசகுற மகளை வந்தித் தணைவோனே;
கயிலைமலை அனைய செந்திற் பதிவாழ்வே-
கரிமுகவன் இளைய கந்தப் பெருமாளே.

ஆரபி ஆதி

5. ஏறா னாலே நீறாய் மாயா
வேளே வாசக் கணையாலே
ஏயா வேயா மாயா வேயால்
ஆம் ஏழ் ஓசைத் தொளையாலே;
மாறா யூறா யீறாய் மாலாய்
வாடா மானைக் கழியாதே-

வாராய் பாராய் சேரா யானால்
வாடா நீபத் தொடைதாராய்;
சீறா வீரா ஈரேழ் பார்சூழ்
சீரார் தோகைக் குமரேசா-
தேவா சாவா மூவா நாதா
தீரா கோடைப் பதியோனே;
வேறாய் மாறாய் யாறா மாசூர்
வேர்போய் வீழப் பொருதோனே;
வேதா போதா வேலா பாலா
வீரா வீரப் பெருமாளே

தேஷ் **ஆதி**

6. ஞால மெங்கும் வளைத்த ரற்றுக் கடலாலே-
நாளும் வஞ்சி யருற்று ரைக்கும் வசையாலே;
ஆல முந்து மதித்த ழற்கும் அழியாதே-
ஆறி ரண்டு புயத்த ணைக்க வருவாயே;
கோல மொன்று குறத்தி யைத்த ழுவுமார்பா-
கோடை யம்பதி யுற்று நிற்கு மயில்வீரா;
கால னஞ்ச வரைத்தொ ளைத்த முதல்வானோர்-
கால்வி லங்கு களைத்த றித்த பெருமாளே

சக்ரவாகம் **ஆதி**

7. பிறவியலை யாற்றினிற் புகுதாதே
பிரகிருதி மார்க்கமுற் றலையாதே
உறுதிகுரு வாக்கியப் பெருளாலே
உனதுபத காக்ஷியைத் தருவாயே
அறுசமய சாத்திரப் பொருளோனே

அறிவுளறி வார்க் குணக் கடலோனே
குறுமுனிவ னேத்துமுத் தமிழோனே
குமரகுரு கார்த்திகைப் பெருமாளே

தொகுப்பு 2
(5 முதல் 8 வகுப்பு வரை)

காவடிச்சிந்து **ஆதி**

8. ஆதிமுத னாளி லென்றன் தாயுடலி லேயி ருந்து
ஆகமல மாகி நின்று புவிமீதில்-

ஆசையுட னேபி றந்து நேசமுட னேவ ளர்ந்து
ஆளழக னாகி நின்று விளையாடிப்;

பூதல மெலாம லைந்து மாதருட னேக லந்து
பூமிதனில் வேணு மென்று பொருள்தேடிப்;

போகமதி லேயு ழன்று பாழ் நரகெய் தாம லுன்றன்
பூவடிகள் சேர அன்பு தருவாயே-

சீதைகொடு போகு மந்த ராவணனை மாள வென்ற
தீரனரி நரா ணன்றன் மருகோனே;

தேவர் முநிவோர்கள் கொண்டல்
மாலரிபிர் மாவு ம்நின்று
தேடஅரி தான வன்றன் முருகோனே;

கோதைமலை வாழு கின்ற நாதரிட பாக நின்ற
கோமளிய நாதி தந்த குமரேசா;

கூடிவரு சூரர் தங்கள் மார்பையிரு கூறு கண்ட
கோடை நகர் வாழ வந்த பெருமாளே

சஹானா ஆதி

9. சாலநெடு நாள்ம டந்தை காயமதி லேய லைந்து
சாமளவ தாக வந்து புவிமீது-
சாதகமு மான பின்பு சீறியமு தேகி டந்து
தாரணியி லேத வழ்ந்து விளையாடிப்-

பாலனென வேமொ ழித்து பாகுமொழி மாதர் தங்கள்
பாரதன மீத ணைந்து பொருள்தேடிப்

பார்மிசையி லேயு ழன்று பாழ்நரகெய் தாம லுன்றன்
பாதமலர் சேர அன்பு தருவாயே;

ஆலமமு தாக வுண்ட ஆறுசடை நாதர் திங்கள்
ஆடரவு பூணர் தந்த முருகோனே-

ஆனைமடு வாயி லன்று மூலமென ஓல மென்ற
ஆதி முதல் நார ணன்றன் மருகோனே!

கோலமலர் வாவி யெங்கு மேவுபுனம் வாழ்ம டந்தை
கோவையமு தூற லுண்ட குமரேசா-

கூடிவரு சூர டங்க மாளவடி வேலே றிந்த
கோடை நகர் வாழ வந்த பெருமாளே

அடானா ஆதி

10. தோழமை கொண்டுச லஞ்செய் குண்டர்கள்
ஓதிய நன்றி மறந்த குண்டர்கள்
சூழ்விர தங்கள்க டிந்தகுண்டர்கள் பெரியோரைத்

தூஷண நின்தைப கர்ந்த குண்டர்கள்
ஈவது கண்டுத கைந்த குண்டர்கள்
சூளுற வென்பதொ ழிந்த குண்டர்கள் தொலையாமல்

வாழநி னைந்துவ ருந்து குண்டர்கள்
நீதிய றங்கள்சி தைந்த குண்டர்கள்
மாளவ கந்தைமி குந்த குண்டர்கள் வலையாலே-

மாயையில் நின்றுவ ருந்து குண்டர்கள்
தேவர்கள் சொங்கள்க வர்ந்த குண்டர்கள்
வாதைந மன்றன்வ ருந்தி டுங்குழி விழுவாரே;

ஏழு மரங்களும் வன்கு ரங்கெனும்
வாலியு மம்பர மும்ப ரம்பரை
ராவண னுஞ்சது ரங்க லங்கையு மடைவேமுன்

ஈடழி யும்படி சந்திர னுஞ்சிவ
சூரிய னுஞ்சுர ரும்ப தம்பெற
ராம சரந்தொடு புங்க வன்திரு மருகோனே;

கோழி சிலம்பந லம்ப யின்றக
லாப நடஞ்செய மஞ்சு தங்கிய
கோபுர மெங்கும்வி ளங்கு மங்கல வயலூரா-

கோமள அண்டர்கள் தொண்டர் மண்டலர்
வேல னெனும்பெய ரன்பு டன்புகழ்
கோடை யெனும்பதி வந்த இந்திரர் பெருமாளே.

சிந்து பைரவி ஆதி

11. தோள் தப்பாமற் றோய்தப் பாணிச்
சூழ்துற் றார்துற் றழுவாருந்-
தூரப் போகக் கோரப் பாரச்
சூலப் பாசச் சமனாரும்;
பாடைக் கூடத் தீயிற் றேறிப்
பாழ்பட் டேபட்டு அழியாதே-

பாசத் தேனைத் தேசுற் றார்பொற்
பாதத் தேவைத் தருள்வாயே;

ஆடற் சூர்கெட் டோடத் தோயத்
தாரச் சீறிப் பொரும்வேலா

ஆனைச் சேனைக் கானிற் றேனுக்
காரத் தாரைத் தரும்விரா;

கூடற் பாடிக் கோவைப் பாவை
கூடப் பாடித் திரிவோனே-

கோலச் சாலிச் சோலைச் சீலக்
கோடைத் தேவப் பெருமாளே

புன்னாகவராளி ஆதி

12. அல்லிவிழி யாலு முல்லைநகை யாலும்
அல்லற்பட ஆசைக் கடலீயும்

அள்ளவினி தாகி நள்ளிரவு போலும்
உள்ளவினை யாரத் தனமாரும்

இல்லுமிளை யோரு மெல்லஅய லாக
வல்லெருமை மாயச் சமனாரும்

எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் கழல்தாராய்

தொல்லைமறை தேடி இல்லையெனு நாதர்
சொல்லுமுப தேசகக் குருநாதர்

துள்ளிவிளையாடு புள்ளியுழை நாண
வெள்ளிவன மீதுற் றுறைவோனே

வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லைவடி வேலைத் தொடுவோனே
வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் பெருமாளே

திலங்கு ஆதி

13. எழுகடல் மணலை அளவிடினதிக
மெனதிடர்பிறவி அவதாரம்
இனியுனதபய மெனதுயிருடலு
மினியுடல் விடுக முடியாது

கழுகொடுநரியு மெரிபுவி மறலி
கமலனுமிகவு மயர்வானார்

கடனுனதபய மடிமை யுனடிமை
கடுகி யுனடிகள் தருவாயே

விழுதிக ழழகிமரகத வடிவி
விமலிமுனருளு முருகோனே

விரிதல மெரிய குலுகிரிநெரிய
விசைபெறு மயிலின் வருவோனே

எழுகடல் குமுற அவுணர்க ளுயிரை
யிரைகொளு அயிலை யுடையோனே

இமையவர் முனிவர் பரவிய புலியு
ரினில் நடமருவு பெருமாளே

மாண்டு ஆதி

14. எனக்கென யாவும்ப டைத்திட நாளும்
இளைப்பொடு காலந் தனிலோயா
எடுத்திடு காயந் தனைக்கொடு மாயும்
இலச்சை யிலாதென் பவமாற
உனைப் பலநாளும் திருப்புக ழாலும்
உரைத்திடு வார்தங் குளிமேவி
உணர்த்திய போதந் தனைப் பிரியாதொண்
பொலச் சரணானுந் தொழுவேனோ
வினைத்திற மோடன் றெதிர்த்திடும் வீரன்
விழக்கொடு வேள்கொன் றவனீயே
விளப்பென மேலென்றிடக் கயனாரும்
விரும்புற வேதம் புகழ்வோனே
சினத்தோடு சூரன் தனைக்கொடு வேலின்
சிரத்தினை மாறும் முருகோனே
திணைப்புன மேவுங் குறக்கொடி யோடுந்
திருத்தணி மேவும் பெருமாளே

பைரவி ஆதி

15. சிவனார் மனங்குளிர உபதேச மந்த்ரம் இரு
செவிமீதி லும்பகர் செய் குருநாதா
சிவகாம சுந்தரி தன் வரபல கந்தநின
செயலேவி ரும்பி உளம் நினையாமல்
அவமாயை கொண்டுலகில் விருதா அலைந்துழலும்
அடியேனை அஞ்சல் என வரவேணும்
அறிவாக மும்பெருக இடரான துந்தொலைய
அருள்ஞான இன்பமது புரிவாயே

நவநீத முந்திருடி உரலோடெ ஒன்றும் அரி
ரகுராமர் சிந்தைமகிழ் மருகோனே
நவலோக முங்கைதொழு நிஜதேவ லங்கிருத
நலமான விஞ்சைகரு விளைகோவே
தெவயானை அங்குறமின் மணவாள சம்ப்ரமுறு
திறல்வீர மிஞ்சுகதிர் வடிவேலா
திருவாவி னன்குடியில் வரவேள்ச வுந்தரிக
ஜெகமேல்மெய் கண்டவிறல் பெருமாளே

கேதாரகௌளை ஆதி

16. வாசித்த நூல்ம தங்கள் பேசிக்கொ டாத விந்து
வாய்மைப்ர காச மென்று நிலையாக-
மாசிக்க பால மன்றில் நாசிக்கு ளோடு கின்ற
வாயுப்பி ராண னொன்று மடைமாறி;
யோசித்த யாரு டம்பை நேசித்து றாத லைந்து
ரோமத்து வார மெங்கு முயிர்போக-
யோகச்ச மாதி கொண்டு மோகப்ப சாசு மண்டு
லோகத்தில் மாய்வ தென்று மொழியாதோ;
வீசப்ப யோதி துஞ்ச வேதக்கு லால னஞ்ச
மேலிட்ட சூர்த டிந்த கதிர்வேலா-
வீரப்ர தாப பஞ்ச பாணத்தி னால்ம யங்கி
வேடிச்சி காலி லன்று விழுவோனே:
கூசிப்பு காவொ துங்க மாமற்றி காத ரிந்த
கூளப்பு ராரி தந்த சிறியோனே-
கோழிப்ப தாகை கொண்ட கோலக்கு மார கண்ட
கோடைக்குள் வாழ வந்த பெருமாளே.

தொகுப்பு 3
(9 முதல் 12 வகுப்பு வரை)

மோகனம் — **ஆதி 7 அட்சரம்**

17. பகர்தற் கரிதான செந்தமிழ்
இசையிற் சிலபாடல் அன்பொடு
பயிலப்பல காவியங்களை — உணராதே

பவளத்தினை வீழியின் கனி
அதனைப் பொருவாய் மடந்தையர்
பசலைத் தனமே பெறும்படி — விரகாலே

சகரக்கடல் சூழும் அம்புவி
மிசை இப்படியே திரிந்துழல்
சருகொத்துளமே அயர்ந்துடல் — மெலியாமுன்

தகதித்திமி தாகிணங்கிண
எனவுற் றெழுதோகை அம்பரி
தனில் அற்புதமாக வந்தருள் — புரிவாயே

நுகர்வித்தக மாகும் என்றுமை
மொழியிற் பொழிபாலை உண்டிடு
நுவல் மெய்ப்புள பாலன் என்றிடும் — இளையோனே

நுதிவைத்தகரா மலைந்திடு
களிருக்கருளே புரிந்திட
நொடியிற் பரிவாக வந்தவன் — மருகோனே

அகரப் பொருளாகி ஒன்றிடு
முதல் அக்கரமானதின் பொருள்
அரனுக்கினிதா மொழிந்திடு — குருநாதா

அமரர்க்கிறையே வணங்கிய
பழனித்திரு வாவினங்குடி
அதனிற்குடி யாய் இருந்தருள் பெருமாளே

கல்யாணி ரூபகம்

18. திமிர உததி அனைய நரக
சனனம் அதனில் விடுவாயேல்
செவிடு குருடு வடிவு குறைவு
சிறிது மிடியும் அணுகாதே
அமரர் வடிவும் அதிக குலமும்
அறிவும் நிறையும் வரவேநின்
அருள தருளி எனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்
சமர முகவெல் அசுரர் தமது
தலைகள் உருள மிகவேநீள்
சலதி அலற நெடிய பதலை
தகர அயிலை விடுவோனே
வெமர அனையில் இனிது துயிலும்
விழிகள் நளினன் மருகோனே
மிடறு கரியர் குமர பழநி
விரவும் அமரர் பெருமாளே

சிந்து பைரவி திஸ்ரயேகம்

19. குடிவாழ்க்கை அன்னை மனையாட்டி பிள்ளை
குயில்போற் ப்ரசன்ன மொழியார்கள்

குலம்வாய்த்த நல்ல தனம் வாய்த்ததென்ன
குருவார்த்தை தன்னை உணராதே
இடைநாட்கள் வெய்ய நமனீட்டி தொய்ய
இடர் கூட்டஇன்னல் கொடுபோகி
இடுகாட்டி லென்னை எரியூட்டுமுன்னு
னிருதாட்கள் தம்மை உணர்வேனோ
வடநாட்டில் வெள்ளிமலைகாத்து புள்ளி
மயிலூக்கவல்ல குமரேசா
வடி வாட்டிவள்ளி அடிபோற்றி வள்ளி
மலைகாத்த நல்ல மணவாளா
அடிநாட்கள் செய்த பிழைநீக்கி என்னை
அருள் போற்றும் வண்மை தருவாழ்வே
அடிபோற்றி அல்லி முடிசூட்டவல்ல
அடியார்க்கு நல்ல பெருமாளே

ஆரபி ஆதி

20. சந்த பந்த முந்து விந்தை செஞ்சொ லின்ப்ர பந்த நந்து
சந்த மங்க லம்பொ ருந்து தமிழ்பாடியே
தஞ்ச மென்று சென்று சென்று நஞ்சு விஞ்சு நெஞ்சு வஞ்சர்
தங்கள் முன்பு நின்று நின்று மெலிவோதியே
சிந்தை நொந்து நொந்து நைந்து நைந்து வெம்பி வெம்பியங்கி
சிந்தி யிந்த வெங்கு டம்பை யழிபோதுமா
சிங்க முன்பு குந்த தந்தி யின்குலங் கலங்கு பண்பு
சிந்த துன்ப மென்றோ ழிந்து கரையேறுவேன்
அந்த ரங்க ளண்ட ரண்ட மண்ட லங்கு லுங்க நின்ற
அசைந்து அசைந்துபந்தெ மும்ப அசுராதியோர்

அங்க டங்க டுண்ட துண்ட கண்ட பந்தி சண்டை வந்த
லைந்து ருண்டு மண்டை சிந்த அடர்கோபனே
கந்த சந்த நுங்க கும்ப கொங்கை இந்தி ரன் மடந்தை
கங்க ணம்பு ரந்த வென்றி அணிநேயனே
கம்பு மஞ்ச முந்தி கழ்ந்தி ருந்திடுஞ் திறஞ்செ றிந்து
கஞ்ச நன்ற லர்ந்த செந்தில் முருகேசனே.

கரஹரப்ரியா ஆதி

21. அவனிதனி லேபி றந்து மதலைஎன வேத வழ்ந்து
அழகுபெற. வேந டந்து இளைஞோனாய்
அருமழலை யேமி குந்து குதலைமொழியேபு கன்று
அதிவிதம தாய்வ ளர்ந்து பதினாறாய்
சிவகலைகள் ஆக மங்கள் மிகவுமறை ஓதும் அன்பர்
திருவடிக ளேநி னைந்து துதியாமல்
தெரிவையர்கள் ஆசை மிஞ்சி வெகுகவலையாய் உழன்று
திரியும் அடி யேனை உன்றன் அடிசேராய்
மவுனஉப தேச சம்பு மதியறுகு வேணி தும்பை
மணிமுடியின் மீத ணிந்த மகதேவர்
மனமகிழ வே அணைந்து ஒருபுறம தாகவந்த
மலைமகள் குமார துங்க வடிவேலா

பவனிவர வேஉ கந்து மயிலின்மிசை யேதி கழ்ந்து
படிஅதிர வேந டந்த கழல்வீரா
பரமபத மேசெ றிந்த முருகன் என வே உகந்து
பழநிமலை மேல்அ மர்ந்த பெருமாளே.

மாண்டு ஆதி

22. அண்டர்பதி குடியேற மண்டசுரர் உருமாற
அண்டர்மன மகிழ் மீற எதிரான
அந்தரியொ டுடனாடு சங்கரனு மகிழ்கூர
ஐங்கரனு முமையாளு மகிழ்வாக
மண்டலமு முநிவோரு மெண்டிசையி லுளபேரு
மஞ்சினனு மயனாறு மெதிர்காண
மங்கையுட னரிதானு மின்பமுற மகிழ்கூற
மைந்துமயி லுடனாடி • வரவேணும்
புண்டரிக விழியாள அண்டர்மகள் மணவாள
புந்திநிறை யறிவாள வுயர்தோளா
பொங்குகட லுடனாகம் விண்டுவரை யிகல்சாடு
பொன்பரவு கதிர்வீசு வடிவேலா
தண்டரள மணிமார்ப செம்பொனெழில் செறிரூப
தண்டமிழின் மிகுநேய முருகேசா
சந்ததமு மடியார்கள் சிந்தையது குடியான
தண்சிறுவை தனில்மேவு பெருமாளே.

ஆபோகி ஆதி

23. இருவினை புனைந்து ஞான விழிமுனை திறந்து
நோயின்இருவினை இடைந்து போக மலமூட
இருளற விளங்கி ஆறு முகமொடு கலந்து பேத
மிலையென இரண்டு பேரும் அழகான
பரிமள சுகந்த வீத மயமென மகிழ்ந்து தேவர்
பணியவிண் மடந்தை பாத மலர்தூவப்

பரிவுகொ டநந்த கோடி முநிவர்கள் புகழ்ந்து பாட
பருமயி லுடன்கு லாவி வரவேணும்
அரியய னறிந்திடாத அடியினை சிவந்த பாதம்
அடியென விளங்கி யாடு நடராஜன்
அழலுறு மிரும்பின் மேனி மகிழ்மர கதம் பெணாகம்
அயலணி சிவன்பு ராரி அருள்சேயே
மறுவலர்கள் திண்ப ணார முடியுடல் நடுங்க ஆவி
மறலியுண வென்ற வேலை உடையோனே
வளைகுல மலங்கு காவி ரியின்வட புறஞ்சு வாமி
மலைமிசை விளங்கு தேவர் பெருமாளே.

நாட்டக்குறிஞ்சி ஆதி

24. செகமாயை உற்றென் அகவாழ்வில் வைத்த
திருமாது கொர்ப்பம் உடலூறித்
தெசமாத முற்றி வடிவாய்நி லத்தில்
திரமாய் அளித்த பொருளாகி
மகவாவின் உச்சி விழிஆன னத்தில்
மலை நேர்பு யத்தில் உறவாடி
மடிமீ தடுத்து விளையாடி நித்தம்
மணிவாயின் முத்தி தரவேணும்
முகமாயம் இட்ட குறமாதி னுக்கு
முலைமேல் அணைக்க வருநீதா
முதுமா மறைக்குள் ஒருமா பொருட்குள்
மொழியே உரைத்த குருநாதா
தகையா தெனக்குன் அடிகாண வைத்த
தனிஏர கத்தின் முருகோனே

தருகாவி ரிக்கு வடபா ரிசத்தில்
சமர்வேல் எடுத்த பெருமாளே

கல்யாணி ஆதி

25. பழியுறுசட் டகமான குடிலையெடுத் திழிவான
பகரும்வினைச் செயல்மாதர் தருமாயப்;

படுகுழிப்புக் கினிதேறும் வழிதடவித் தெரியாது
பழமைபிதற் றிடுலோக முழுமூடர்;

உழலும்விருப் புடனோது பலசவலைக் கலைதேடி
யொருபயனைத் தெளியாது விளயாமுன்

உன்கமலப் பதநாடி யுருகியுளத் தமுதூற
உனது திருப் புகழோத அருள்வாயே;

தெழியுவரிச் சலராசி மொகுமொகெனப் பெருமேரு
திடுதிடெனப் பலபூதர் விதமாகத்-

திமிதிமெனப் பொருசூர னெறுநெறனப் பலதேவர்
ஜெயஜெயெனக் கொதிவேலை விடுவோனே;

அழகுதரித் திடுநீப சரவணவுற் பவவேல
அடல்தருகெற் சிதநீல மயில்வீரா-

அருணைதிருத் தணிநாக மலைபழநிப் பதிகோடை
அதிப இடைக் கழிமேவு பெருமாளே.

மங்களப் பாடல்கள்

26. ஏறுமயிலேறி விளையாடு முகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறும் அடியார்கள் வினை தீர்க்குமுகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்ற முகம் ஒன்றே

மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகமான பொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருணாசலம் அமர்ந்த பெருமாளே.

மகுடம்

27. மைவரும் கண்டத்தர் மைந்த! கந்தா! என்று வாழ்த்தும் இந்த
கைவரும் தொண்டன்றி மற்றறியேன் கற்ற கல்வியும் போய்ப்
பைவரும் கேளும் பதியும் கதறப், பழகி நிற்கும்
ஐவரும் கைவிட்டு, மெய்விடும் போது உன் அடைக்கலமே

28. காக்கக் கடவிய நீ காவாதிருந்தக் கால் ஆர்க்குப் பரமாம் ஆறுமுகவா
பூக்கும் கடம்பா, முருகா கதிர்வடிவேலா
நல்ல இடங்காண் இறங்காயினி.

29. உன்னையொழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னையொருவரை யான் பின் செல்லேன்
பன்னிருகை கோலப்பா
வானோர் கொடிய வினைத் தீர்த்தருளும் வேலப்பா
செந்தில் வாழ்வே

30. நோயுற்று அடராமல் நொந்து மனம் வாடாமல்
பாயில் நான் கிடவாமல் இப்பாவினன் - காயத்தை
ஓர் நொடிக்குள் நீக்கியெனை ஒண்போரூர் ஐயாநின்
சீரடிக்கீழ் வைப்பாய் தெரிந்து

31. முடியாப் பிறவிக் கடலில் புகார் முழுதும் கெடுக்கும்
மிடியார்படியில் விதனப்படார் வெற்றிவேல் பெருமாள்
அடியார்க்கு நல்லபெருமாள், அவுணர் குல மடங்கப்
பொடியாக்கிய பெருமாள், திருநாமம் புகல்பவரே.

32. ஏதுபிழை செய்தாலும் ஏழையேனுக்கிரங்கித்
தீது புரியாத தெய்வமே - நீதி
தழைக்கின்ற போரூர்த் தனிமுதலே நாயேன்
பிழைக்கின்ற வாறு நீ பேசு.

33. வான் முகில் வழாதுபெய்க மலிவளம் சுரக்கமன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்.

34. ஆறிருதடந்தோள் வாழ்க; ஆறுமுகம் வாழ்க; வெற்பைக்
கூறுசெய் தனிவேல் வாழ்க; குக்குடம் வாழ்க; செவ்வேள்
ஏறிய மஞ்சை வாழ்க; யானைதன் அணங்கு வாழ்க;
மாறிலா வள்ளி வாழ்க; வாழ்க சீரடியாரெல்லாம்.

35. ஆதாரமிலேன் அருளைப் பெறவே
நீதான் ஒரு சற்றும் நினைந்திலையே
வேதாகம ஞான விநோத மனோ
அதீதா சுரலோக சிகாமணியே

36. எந்தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தா குலமானவை தீர்த்து
என்னையாள் கந்தா கதிர்வேலவனே
உமையாள் மைந்தா குமரா மறைநாயகனே

37. உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

38. பேசா அநுபூதி பிறந்ததுவே
ஓம் சாந்தி.... சாந்தி.... சாந்தி.
சுப்ரமண்யோம் - சுப்ரமண்யோம் - சுப்ரமண்யோம்.

வல்லக்கோட்டை முருகன் அன்னதானக் குடில்

(கோமளீஸ்வரர் ஆலயம் அருகில்)

முருகனடியார்கள் கவனிக்க:

வல்லக்கோட்டை முருகன் அன்னதானக் குடிலில் (குளக்கரை அருகில் உள்ள சிவன் கோயில் அருகில்) ஒவ்வொரு **ஞாயிறு, சஷ்டி, விசாகம், கிருத்திகை மற்றும் விசேஷ நாட்களில்** வெளியூரில் இருந்து திருக்கோயிலுக்கு வரும் முருகனடியார்களுக்கு முருகன் அருள் கலந்த அன்னம் பகல் 12.00 மணியிலிருந்து பிற்பகல் 3.00 மணி வரை இலவசமாக வழங்கப்படுகிறது. இது **இராமலிங்க சுவாமிகளின்** கொள்கைப்படி அடியார்கள் பசியாறிச் செல்ல செய்யப்படும் இலவசத் தொண்டாகும்.

இதற்கு எந்தக் கட்டணமோ, மாதச் சந்தாவோ செலுத்தத் தேவையில்லை என்பதையும் அடியார்களுக்கு பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

வல்லக்கோட்டை

முருகன் அன்னதானக் குழு,

தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம்.

வல்லக்கோட்டை முருகன் கோயில் விசேஷ நிகழ்ச்சிகள்

ஆங்கிலப் புத்தாண்டு வழிபாடு

சென்னை கூட்டுறவுத் துறை அலுவலர்களால் "வல்லக் கோட்டை இறைப்பணி மன்றம்" என்ற அமைப்பின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஆங்கிலப் புத்தாண்டு தினத்தன்று சிறப்பு வழிபாடு நடத்தப்படுகிறது.

தமிழ்ப் புத்தாண்டு வழிபாடு

தெய்வீக சத்ய தர்மஸ்தாபனம் ஒவ்வொரு தமிழ்ப்புத்தாண்டன்றும் புஷ்ப அலங்காரத்துடன் அருள்மிகு வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு நிகழ்த்துகிறது.

ஆடிக்கிருத்திகை

வல்லக்கோட்டை ஆடிக்கிருத்திகை மஹோற்சவ சபையினரால் ஒவ்வொரு ஆடிக்கிருத்திகையன்றும் ஸ்ரீ வள்ளி தேவ சேனா சமேத ஸ்ரீ சுப்ரமணிய சுவாமிக்கு மஹா அபிஷேகமும் மஹோற்சவமும் நிகழ்த்தப்பெறும்.

விநாயக சதுர்த்தி

ஒவ்வொரு ஆண்டும் விநாயக சதுர்த்தியன்று தெய்வீக சத்யதர்ம ஸ்தாபனத்தால் விஜய கணபதிக்கு அபிஷேக ஆராதனையும். சந்தனக்காப்பும் நிகழ்த்தப்பெறும்.

கந்தர் சஷ்டி

வல்லக்கோட்டை கந்தர்சஷ்டி விழாக் குழுவினரால் ஒவ்வொரு ஆண்டும் கந்த சஷ்டி விழா நாளில் கந்த சஷ்டி விரதத்துடன் நிகழ்த்தப்பெறும்.

நவராத்திரி

நவராத்திரி விழாவின்போது ஒவ்வொரு ஆண்டும் ஸ்ரீதேவி கருமாரி திரிபுர சுந்தரி அம்மனுக்கு 10 நாட்களும் சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரங்களும், சண்டி ஓமமும் இன்னும் பிற சிறப்பு பூஜைகளும் தேவி உபாசினி **பத்மினி சிவசுப்ரமணியம், தெய்வீக சத்யதர்ம ஸ்தாபனம்** இணைந்து நிகழ்த்துகிறார்கள்.

மாதப்பரணி வழிபாடு / கிருத்திகை விழா

ஒவ்வொரு பரணி தினத்தன்றும் இரவு 10 மணி அளவில் **சிங்கப்பெருமாள் கோயில் முருகனடியார்களால்** சீரிய பாலபிஷேகமும் சிங்கார விபூதிக் காப்பும், ஒவ்வொரு கிருத்திகை தோறும் **தெய்வீக சத்யதர்ம ஸ்தாபனம்** மற்றும் **உபயதாரர்களால்** ஏழடி முருகனுக்கு எழில்மிகு சந்தனக் காப்பும், அம்மன்களுக்குக் குங்குமக் காப்பும் சாத்தப்படுகின்றது.

வல்லக்கோட்டையில் இலவச மருத்துவ உதவி

பிரதி மாதமும் முதல் ஞாயிறன்று **சென்னை அடையாறில்** உள்ள **வென்சூர் மெடிகல்ஸ்** அளிக்கும் இலவச மருந்தைக் கொண்டும், சென்னை, அயன்புரத்தில் வசிக்கும் **டாக்டர் பி. ஈஸ்வரன், எம்.பி.பி.எஸ்.,** அவர்களுடைய உதவியைக் கொண்டும் வல்லக்கோட்டை வாழ் மக்களுக்கும், மற்றும் சுற்றுப்புற கிராம மக்களுக்கும் இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. **டாக்டர் பெரி. மஹாலிங்கமும், டாக்டர் கே.ஜி.பி. ஈஸ்வரன்** அவர்களுக்கு உறுதுணையாக செயல்படுகிறார். கிராமங்களில் வாழும் பல குடும்பங்கள் இச் சேவையின் மூலம் பலனடைந்துள்ளனர். முருகன் அருளால் நோய் தீர்ந்து குணமடைந்து வருவது இங்குக் குறிப்பிடத்தக்க செய்தியாகும்.

மழலைப்பட்டாள வளர்ச்சியில் தமிழ்நாட்டுத் திருப்புகழ்ச் சபைகளின் கூட்டமைப்பு

தமிழ்நாட்டுத் திருப்புகழ்ச் சபைகள் கூட்டமைப்பின் முக்கியக் குறிக்கோள்கள்

1. மனம், மொழி, மெய் ஆகியவற்றால் ஒன்றுபட்ட தெய்வீகக்கவி ஸ்ரீ அருணகிரிநாதர் சீடர்களாகிய திருப்புகழ்ச் சபையினர் மற்றும் தமிழ் ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் துணை கொண்டு

அ. 3 வயதிலிருந்து 20 வயது வரை மாணவ, மாணவியர் குறிப்பிட்ட ராகம் தாளத்தில் திருப்புகழினைப்பாடி கூட்டு வழிப்பாடு செய்தல்.

ஆ. மாணவ, மாணவியர் தகுந்த திருப்புகழ்ச் சபையினர் துணையுடன் தத்தம் பகுதி ஆலயங்களில், தினமொரு ஆலயத்தில் காலை, மாலை நேரங்களில் ஒரு மணி நேரமாவது கூட்டு வழிபாடு செய்தல்.

இ. ஆன்மீக நெறி கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி, வினாடி வினாப் போட்டி, வரைதல் போட்டி, பட்டிமன்றம், இசைப் போட்டிகளில் பங்கேற்க ஆவன செய்தல்.

ஈ. மாணவ, மாணவியருக்கே மேடையமைத்துத் தந்து இளைய தலைமுறையினை முன்னேற ஊக்கமளித்தல், பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்குதல்.

உ. கணிப்பொறி யுகத்தில் ஆன்மீகம் தழைக்க பள்ளிகள் தோறும் தினமொரு திருப்புகழ்ப் பாடலை தமிழ்த்தாய் வாழ்த்துக்குப் பின் பாடிட வேண்டும்.

ஊ. மதிப்பெண் பெறுவதற்காகவே தமிழைப் புறக்கணித்து மற்ற மொழிக்கு தாவுவதை தவிர்க்க தமிழ் ஆசிரியர்கள் விழிப்புணர்வோடு ஆன்மீக வழியில் செயல்படல்.

எ. வல்லக்கோட்டை அ/மி முருகன் ஆலயத்தில் ஆண்டுதோறும் குடியரசுத் தினத்தன்று (ஜனவரி 26 ஆம் நாள்) மிக அதிக எண்ணிக்கையில் கூட்டு வழிப்பாட்டில் பங்கு பெறும் பள்ளி தலைமை ஆசிரியருக்கும், இசை ஆசிரியைக்கும் பரிசளித்து சிறப்பு செய்தல்.

ஏ. கூட்டமைப்பின் உறுப்பினரான திருப்புகழ்ச் சபையினரின் தலையாய இசை வல்லுனருக்குப் பட்டமளித்துக் கவுரவித்தல்.

ஐ. ஆன்மீக நெறியில் கூட்டமைப்பின் குறிக்கோளுக்கிணங்கச் செயல்படும் சேக்கிழார் மன்றம் போன்ற அமைப்புகளுக்கு ஆக்கபூர்வமான ஆதரவு நல்கிடல்.

ஒ. இறையாண்மையையும், ஆன்மீக வளர்ச்சியையும் பேணிப் பாதுகாக்கும் வள்ளண்மை மிக்கோரை கூட்டமைப்பின் புரவலராய் மாவட்டந்தோறும் நியமித்து தமிழகம் முழுவதும் செயல்படல்.

ஆன்மீக நெறியில் நம் மழலைச் செல்வங்கள் வளம் பெற அமைப்போம்! அமைப்போம்!! ஆலயந்தோறும் திருப்புகழ்ச் சபை அமைப்போம் !!!

வாழ்க இறையாண்மை! *வளர்க ஆன்மீகம்!!*

ம. பெரியசாமிப்பிள்ளை
எம்.ஏ., எம்.எட்., பி.எஸ்சி.,
பி.எல்., பி.ஜி.சி.டி.இ.,
மாநிலத்தலைவர் &
மாநில அமைப்பாளர்

ஆர். ராஜாமணி
மாநிலப் பொதுச் செயலர்
2, ஆனந்தம் நகர், திருவேற்காடு.
சென்னை - 600 077.

தமிழ்நாட்டுத் திருப்புகழ்ச் சபைகளின் கூட்டமைப்பு

(மாநிலத் தலைமையகம்)
52, அருணாச்சலம் முதல் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030. போன் : 642 6735 பி.பி.

உ

வல்லக்கோட்டை முருகன் துணை

தமிழ்நாட்டுத் திருப்புகழ்ச் சபைகளின் கூட்டமைப்பு

(மாநிலத் தலைமையகம்)

52, அருணாச்சலம் முதல் தெரு, செனாய் நகர்,
சென்னை - 600 030. தொலைபேசி : 642 6735 பி.பி.

வல்லக்கோட்டை அருள்மிகு முருகன் கோவில் பழம்பெருமை மிக்கதாயினும், சிறந்த நிலையில் இல்லை. தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம், பல ஆன்மீக இறையன்பர்கள் நல்லாசியுடனும், ஆதரவுடனும் வல்லக்கோட்டைக் கிராமத்திலும், அருள்மிகு சுப்ரமணிய சுவாமி கோவில் வளாகத்திலும் பல திருப்பணிகளைச் செய்து வருகின்றது.

ஆலயத்திருப்பணிகளைச் செய்வதோடன்றி திருமுருகனை வழிபட வரும் வெளியூர் இறையன்பர்கட்கு ஒவ்வொரு கிருத்திகை, விசாகம், சஷ்டி, ஞாயிறு, ஆங்கிலம், தமிழ்ப் புத்தாண்டு தினம், குடியரசு தினம், மே தினம் மற்றும் முக்கிய விசேஷ நாட்களில் சிவன் கோவில் அருகிலுள்ள வல்லக்கோட்டை முருகன் அன்னதானக் குடிலில் பகல் 12 மணிமுதல் பிற்பகல் 3 மணி வரை முருகன் அருள் கலந்த உணவு இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

ஆண்டுதோறும் குடியரசுத் தினத்தன்று (ஜனவரி 26ம் நாள்) நடைபெறும் கூட்டு வழிபாட்டிற்கும், திருப்புகழ்ப் பாடல் போட்டி பரிசளிப்பு விழாவிற்கும் தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம் முழு ஆதரவு அளித்து வருகிறது. ஞாயிறு, கிருத்திகை மற்றும் விசேஷ தினங்களில் திருப்புகழ் பஜனைகளையும், மற்றும் விசேஷ நிகழ்ச்சிகளை தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபணம் நடத்தி வருகிறது.

வல்லக்கோட்டை முருகன் துணை

தமிழ்நாட்டுத் திருப்புகழ் சபைகளின் கூட்டமைப்பு

(மாநிலத் தலைமையகம்)

52, அருணாச்சலம் முதல் தெரு, செனாய் நகர், சென்னை - 600 030.
தொலைபேசி : 642 6735 பி.பி.

தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம், வல்லக்கோட்டை

தெய்வீகக் கவி

அருள்மிகு அருணகிரிநாதர் பாடல்கள்

இசை ஆசிரியர் இசைஞானி திரு. **எம். பாலதேசிகர்**
இசையில் தங்கள் பள்ளி **மழலைப்பட்டாளங்களின்**
திருப்புகழ்ப் பிரளயம்

தலைமை:

தொழிலதிபர், வள்ளல் திருமிகு. **பெ. கோவிந்தசாமிப் பிள்ளை,**
சேர்மன் & நிர்வாக இயக்குநர்
செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்,
இந்தியன் சேம்பர் பில்டிங்ஸ், சென்னை - 108.
தொலைபேசி : 534 2043, 534 1690

முன்னிலை:

புரவலர் தவத்திரு. **எம்.வி. அரங்கநாதன் அடிகளார்**
AH-192, அண்ணாநகர், சென்னை - 600 040. தொலைபேசி : 620 0194
நிகழ்விடம் : சென்னை மியூசிக் அகாடமி, சென்னை - 600 014.
நாள் : அறிவிப்பு பின்னர்

மாநிலத் தலைவர் & மாநில அமைப்பாளர்,

திரு. **ம. பெரியசாமிப் பிள்ளை,** எம்.ஏ., எம்.எட்., பிஎஸ்சி., பி.எல்., பிஜிசிடிஇ.
உதவித் தலைமை ஆசிரியர்,
சென்னை கிறித்தவக் கல்லூரி மேனிலைப் பள்ளி,
சேத்துப்பட்டு, சென்னை - 600 031.

நன்றியுரை

இந்த தெய்வீக நூலை வெளியிட முருகன் திருவருள் துணையுடன் தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பேருதவி செய்த தொழிலதிபர், வள்ளல் **திருமிகு. வெ. கோவிந்தசாமிப் பிள்ளை,** சேர்மன் & நிர்வாக இயக்குநர், **செஞ்சுரி பிளவர் மில்ஸ் பி. லிமிடெட்,** இந்திய சேம்பர் பில்டிங்ஸ், சென்னை - 600 108, மற்றும் அவர்தம் புதல்வர் **திருமிகு. கோ. ரவீந்திரன்** ஆகியோருக்கு தெய்வீக அருட்கவி அருள்மிகு **அருணகிரிநாதர்** பக்த கோடிகளுடைய அன்பும், நெஞ்சம் நிறைந்த வணக்கமும், நன்றியும் உரித்தாகுக ! **வல்லக்கோட்டை அருள்மிகு கோடையாண்டவர்** திருவருளால் அந்நிறுவனத்தின் உரிமையாளர், மற்றும் அந்நிறுவனத்தில் பணிபுரியும் தொழிலாளர்கள் அனைவரும் சகல செல்வ யோக மிக்க நோயற்ற நீடித்த ஆயுளுடன் பெருவாழ்வு வாழ்ந்து முருகனுக்கு தெய்வீக திருப்பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுகிறோம்.

வல்லக்கோட்டை முருகன் அன்னதான குழு,
தெய்வீக சத்ய தர்ம ஸ்தாபனம்,
வல்லக்கோட்டை.
&
தமிழ்நாட்டுத் திருப்புகழ் சபைகளின் கூட்டமைப்பு,
(மாநில தலைமையகம்)
52, அருணாசலம் முதல் தெரு,
செனாய் நகர், சென்னை - 600 030.